# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1840/51 - 2013 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2013.12.13

*1840/51 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1980, ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிய 113 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட யாதேனுமொரு படிமுறைக்கும் பங்கம் விளைவிக்காதவாறு பின்வரும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமைய,

டி.எம்.எல்.சீ.சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2013 திசெம்பர் 13.

01. **அமுல்படுத்தப்படும் திகதி** : 2006.01.01

02. **நியமன அதிகாரம் பெற்றவர்** : அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

03. **பதவி வகைகள் பற்றிய விபரம்**:

3.1 பதவி வகை : நிறைவேற்றுத்தரம்
: சிரேஷ்ட நிறைவேற்றுத்தரம்

3.2 தரங்கள் : நிறைவேற்றுத்தரம் III
: நிறைவேற்றுத்தரம் II
: நிறைவேற்றுத்தரம் I
: சிரேஷ்ட நிறைவேற்று விஷேட தரம்

04. **கடமைகளும் பொறுப்புக்களும்**:

கால்நடை வளத்துறைக்குரிய கால்நடை இனப்பெருக்கல், கால்நடைப் போஷாக்கு, கால்நடை அபிவிருத்திக் கருத்திட்டங்கள், ஆய்வுகள், விரிவாக்கல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள், விலங்கு சுகாதாரம் மற்றும் விலங்கு நோய்க் கட்டுப்பாடுகள், கால்நடை வளத்துறைக்குரிய கட்டளைச் சட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் பொது சுகாதாரத்திற்கான கால்நடை சுகாதாரத்தைப் பேணுதலும் வன விலங்குகளின் பாதுகாப்பிற்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுதல் என்பன இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் பொதுவான கடமைகளும் பொறுப்புக்களுமாகும்.

05. **சம்பளம்**:

5.1 சம்பளக் குறியீட்டிலக்கம் : SL1 – 2006 – நிறைவேற்றுத்தரம்
: SL3 - 2006 – சிரேஷ்ட நிறைவேற்றுத்தரம்

5.2 சம்பளத் திட்டம் : SL1 - 2006 - ரூபா 22, 935-10x645 -8x790-17x1,050-53, 555
SL3 - 2006 - ரூபா 42, 390-12x1, 310-58, 110

5.3 தரத்திற்கேற்ப ஆரம்பச் சம்பளப் படிநிலை

| தரம் | சம்பளப் படிமுறை | சம்பளம் |
|---|---|---|
| III | SL1 - 2006 படிமுறை 01 | ரூபா 22,935 |
| II | SL1 - 2006 படிமுறை 12 | ரூபா 30,175 |
| I | SL1 - 2006 படிமுறை 20 | ரூபா 36,755 |
| விஷேட | SL3 - 2006 படிமுறை 01 | ரூபா 42,390 |

06. **சேவைக்கான பதவி நிலை**:

6.1 அனுமதிக்கப்பட்ட பதவிகள் பதவிகளின் எண்ணிக்கை:

| அனுமதிக்கப்பட்ட பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவித்தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| முதலாவது பின்னிணைப்பிற்கமைய | விஷேட தரம் | | 04 |
| | I, II மற்றும் III ஆம் தரப் பதவிகளின் எண்ணிக்கை | Iஆம் வகுப்பு (ஆவணவப்படுத்தப்பட்ட) | 64 |
| | | கால்நடை வைத்திய அதிகாரி | 539 |
| | | கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர் | 41 |
| | | கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 24 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 05 |
| | | மொத்தம் | 673 |

6.2 இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை : முதலாவது பின்னிணைப்பிற்கமைய
I, II மற்றும் III ஆம் தர உத்தியோகத்தர் எண்ணிக்கை = 673
விசேட தரம் = 04

ஒரு தரத்திலிருந்து மற்றைய தரப் பதவிக்கான உயர்வு I, II மற்றும் III ஆம் தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை இணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கையாகக் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

6.3 பதவி /பதவியின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்.

07. **ஆட்சேர்ப்பு நடைமுறை**

III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது குறிப்பிடப்பட்ட வருடத்தின் தேவையான எண்ணிக்கை அந்தச் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தேவையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும்.

7.1 ஆட்சேர்ப்பு விகிதாசாரம்

| பதவி | முறையும் விகிதாசாரமும் | |
|---|---|---|
| | திறந்த | மட்டுப்படுத்தப்பட்ட |
| கால்நடை மருத்துவ அதிகாரி | 100% | - |
| கால்நடை உத்தியோகத்தர் | 50% | 50% |

7.2 திறந்த ஆட்சேர்ப்பு:

7.2.1. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் : இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் III ஆம் தரம்
(அ) கால்நடை வைத்திய அதிகாரி (ஆ) கால்நடை உத்தியோகத்தர்

7.2.2. தகைமைகள்:

7.2.2.1. கல்வித் தகைமைகள்:

*(அ)கால்நடை வைத்திய அதிகாரி :*
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலங்கியல் மருத்துவ விஞ்ஞானப் பட்டம்.

*(ஆ)கால்நடை உத்தியோகத்தர் :*
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலங்கு வளர்ப்பு விஞ்ஞானம் /விலங்கியல் மருத்துவ விஞ்ஞானம் /விவசாய விஞ்ஞானம் தொடர்பான 4 வருடங்களுக்கு குறையாத காலத்தினைக் கொண்ட பட்டம்.

7.2.2.2. தொழில்சார் தகைமைகள் : பொருத்தமற்றது.

7.2.2.3. அனுபவம் : பொருத்தமற்றது.

7.2.2.4. உடல்சார் தகைமைகள்:

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றக்கூடிய வகையில் ஏனைய அனைத்து வழிகளிலும் உடல் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். பதவி நிரந்தரப்படுத்தப்படுவற்கு முன்னர் தேக ஆரோக்கிய நிலைமை வைத்திய ஆய்வு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2.2.5. ஏனையவை:

*(அ) கால்நடை வைத்திய அதிகாரி :*

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் இலங்கை விலங்கு மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(iii) 7.2.2 தொடக்கம் 7.2.3 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*(ஆ) கால்நடை உத்தியோகத்தர் :*

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) 7.2.2 தொடக்கம் 7.2.3 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3. வயது:

7.2.3.1. ஆகக் குறைந்த வயதெல்லை : 21 வயதுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

7.2.3.2. ஆகக்கூடிய வயதெல்லை : 35 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

7.2.4. ஆட்சேர்ப்பு நடைமுறை :

7.2.4.1. (அ) கால்நடை வைத்திய அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல்:

(i) விண்ணப்பதாரிகளின் திறமைமட்டத் தொடரொழுங்கிற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்;

(ii) *திறமை மட்டப் படிவம் :-* பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவ விஞ்ஞான பீடத்தினால் வெளியிடப்பட்டுள்ள திறமை மட்டத் தொடரொழுங்குப் படிவம் கவனத்தில் எடுக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு பல்கலைக்கழகங்களின் விலங்கு மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் தொடர்பில் விலங்கு மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட தொடரொழுங்கினைக் கவனத்தில் கொண்டு அதற்குரிய திறமை மட்டப் படிவம் இறுதியில் உள்ளடக்கப்படும்;

(iii) வெற்றிடங்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு நூற்றுப்பத்து வீதத்திற்குச் (110%) சமமான எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் திறமை மட்டப் படிவத்தின் தொடரொழுங்கிற்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ஆ) கால் நடை உத்தியோகத்தர் பதவி : எழுத்துப் பரீட்சை

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| 1. பொது வினாப்பத்திரம்<br>பொது விவேகமும் பொது அறிவும் | 100 | 40 |
| 2. விடயத்திற்கமைவான வினாப்பத்திரம் | 100 | 40 |

***குறிப்பு :*** பரீட்சை தொடர்பான விபரங்கள் மற்றும் பாடத்திட்டம் பின்னிணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது.

7.2.4.1.1. பரீட்சை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.2.4.2. பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

7.2.4.2.1. பொது நேர்முகப் பரீட்சையின் குறிக்கோள்:
இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சித்தல்.

7.2.4.2.2. பொது நேர்முகப் பரீட்சைச் சபையினை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர் : அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

7.2.4.2.3. பொது நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு :
பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கமைய, வெற்றிடங்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு நூற்றுப்பத்து வீதத்திற்குச் (110%) சமமான எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் தொடரொழுங்கிற்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7.2.5. விண்ணப்பங்கள் கோரும் முறை :
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம் மற்றும் இணையத்தில் அறிவித்தலைப் பிரசுரித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :
(கால்நடை உத்தியோகத்தர் பதவிக்காக மட்டும்)

7.3.1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம் : III ஆம் தரம்

7.3.2. தகைமைகள்:

7.3.2.1 கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :

இலங்கை கால்நடை வளர்ப்புக் கல்லூரியினால் வழங்கப்படும் கால்நடை வளர்ப்பு தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா /இலங்கை விவசாயக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமாவுடன் தற்போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் சேவையாற்றும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் / கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளர்/ இலங்கை தொழில்நுட்பச்சேவையில் விசேட தர உத்தியோகத்தராக இருத்தல் அல்லது முதலாம் தரத்தில் 4 வருட திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலங்கு வளர்ப்பு விஞ்ஞானம் அல்லது விவசாய விஞ்ஞானம் தொடர்பான 4 வருட பட்டத்துடன் தற்போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் சேவையாற்றும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் / கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளராக இருத்தல் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியராக இருத்தல் வேண்டும்.

7.3.2.2. உடல்சார் தகைமைகள்:

நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குரிய தேக ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.3.2.3. ஏனையவை:

7.3.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகைகளிலும் பூர்த்திசெய்திருந்தால் மட்டுமே பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

7.3.3 ஆட்சேர்ப்பு நடைமுறை:

7.3.3.1 எழுத்துமூலப் பரீட்சை:

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. பொது வினாப்பத்திரம்<br>பொது விவேகமும் பொது அறிவும் | 100 | 40 |
| 2. விடயத்திற்கமைவான வினாப்பத்திரம் | 100 | 40 |

***குறிப்பு :*** பரீட்சை தொடர்பான விபரங்கள் மற்றும் பாடத்திட்டம் பின்னிணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது.

7.3.3.1.1. பரீட்சை நடர்த்தும் அதிகாரம் பெற்றவர் : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.3.3.2. தொழில்சார் பரீட்சை : பொருத்தமற்றது.

7.3.3.3. பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

7.3.3.3.1. பொது நேர்முகப் பரீட்சையின் குறிக்கோள்: இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகளின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சித்தலும் மற்றும் உடல்சார் தகுதியினைப் பரீட்சித்தலுமாகும்.

7.3.3.3.2. பொது நேர்முகப் பரீட்சைச் சபையினை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்: அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

7.3.3.3.3. விண்ணப்பங்கள் கோரும் முறை : இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம் மற்றும் இணையத்தில் அறிவித்தலைப் பிரசுரித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3.3.3.4. பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைத்தல் : வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் திறமை மட்டத் தொடரொழுங்கிற்கமைய காணப்படும் வெற்றிடங்களுக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு நூற்றுப்பத்து வீத்திற்குச் (110%) சமமான எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில் திறமை மட்டத் தொடரொழுங்கிற்கமைய நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7.4 திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு : பொருத்தமற்றது.

08. **வினைத்திறன்காண் தடை:**

8.1

| எந்த வினைத்திறன்காண் தடை என்பது பற்றி | வினைத்திறன்காண் தடை சித்தியடைய வேண்டிய கால எல்லை | வினைத்திறன்காண் தடையின் தன்மை: எழுத்துப் பரீட்சை /தொழில்சார் பரீட்சை/ சான்றிதழ் பாட நெறி /பிற |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன் காண் தடை | III ஆம் தர ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன் | எழுத்துப் பரீட்சை பாடத்திட்டம் 3 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 2 ஆவது வினைத் திறன்காண் தடை | II ஆம் தரத்திற்கு உயர்வு பெற்று 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன் | எழுத்துப் பரீட்சை பாடத்திட்டம் 4 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 3 ஆவது வினைத்திறன் காண் தடை | I ஆம் தரத்திற்கு உயர்வு பெற்று 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன் | எழுத்துப் பரீட்சை பாடத்திட்டம் 5 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது. |

8.2 பரீட்சை நடாத்தப்படும் தவணைகள் : ஒரு வருடத்திற்கு இரு முறை

8.3 வினைத்திறன்காண் தடை ப்பரீட்சையினை நடாத்தும் அதிகாரம் பெற்றவர் :

1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – பரீட்சை ஆணையாளர் நாயகம்.

3 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம்.

09. **மொழித் தேர்ச்சி:**

9.1

| தரம் | பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| I. அரசகரும மொழி | அரசகரும மொழி தவிர்ந்த வேறு மொழியில் சேவையில் அமர்த்துவதற்குத் தகைமை பெற்ற உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரப் படுத்துவதற்கு முன்னர் அரச கரும மொழியில் III ஆம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| II. ஏனைய அரசகரும மொழி | அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 07/2007மற்றும் அதனைச் சார்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய உரிய மட்டத் தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

10. **தரம் உயர்த்தல்:**

10.1 III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு தரம் உயர்த்துதல்:

10.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல்;

(ii) சேவை வகை III ஆம் தரத்தில் குறைந்தபட்சம் பத்து வருட (10) தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 10 சம்பள உயர்வினையும் பெற்றிருத்தல்;

(iii) அனுமதிக்கப்பட்ட வினைத்திறன் அடைவுமட்ட மதிப்பீட்டு விதிமுறைகளுக்கமைய உயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தினுள் திருப்திகரமான அல்லது அதிலும் கூடிய வினைத்திறன் அடைவு மட்டத்தை வெளிக்காட்டியிருத்தல்;

(iv) உயர்வு பெறும் தினத்திற்கு அண்மித்த ஐந்து (5) வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்;

(v) உரிய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்;

(vi) உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய திகதிக்கு முன்னர் சித்தியடைந்திருத்தல்;

(vii) 12:6:II: (i) இன் கீழ் காட்டப்படும் தேவையான உரிய பயிற்சியை நிறைவு செய்திருத்தல்.

10.1.2 பதவி உயர்வு முறை:

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய படிவத்தின் மூலம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமைகளைப் பெறும் தினத்திலிருந்து அமுலாகும்படி II ஆம் தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரம் உயர்த்தப்படுவர்.

10.2 தரம் II இல் இருந்து தரம் I இற்கு பதவி உயர்த்துதல்:

10.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் உரிய துறையில் பெற்றுக்கொண்ட பட்டப்பின்படிப்புப் பட்டத்தினைப் பெற்றிருத்தல்;

(ii) சேவை வகை II ஆம் தரத்தில் குறைந்த பட்சம் ஏழு வருட (07) தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய ஏழு (07) சம்பள உயர்வினையும் பெற்றிருத்தல்;

(iii) பதவி உயர்வுக்காகத் தகைமை பெறும் தினத்திற்கு அண்மித்த ஐந்து (5) வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்;

(iv) அனுமதிக்கப்பட்ட செயலாற்று விதிமுறைகளுக்கமைவான பதவி உயர்வுக்காக II ஆம் தரத்திற்கு அண்மித்த ஏழு (07) வருட காலத்தினுள் திருப்திகரமான அல்லது அதிலும் கூடிய செயலாற்றுகை ஒன்றினை அடைந்திருத்தல் வேண்டும்;

(v) உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல்;

(vi) 12:6:II: (ii) இன் கீழ் காட்டப்படும் தேவையான உரிய பயிற்சியை நிறைவு செய்திருத்தல்.

10.2.2. பதவி உயர்வு முறை:

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய படிவத்தின் மூலம் அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு விண்ணப்பிக்கும் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமைகளைப் பெறும் தினத்திலிருந்து அமுலாகும்படி I ஆம் தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரம் உயர்த்தப்படுவர்.

10.3. தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல்:

10.3.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) பதவி உயர்வுக்காகத் தகைமை பெறும் தினத்திற்கு நிறைவேற்றுத் தரச் சேவை வகை முதலாம் வகுப்பில் ஐந்து (05) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்;

(ii) பதவி உயர்வுக்காகத் தகைமை பெறும் தினத்திற்கு தகைமை பெறும் சேவை வகை /பதவிகளுக்குரிய நிறைவேற்றுத் தர வகுப்பில் 18 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்;

(iii) பதவி உயர்வுக்காகத் தகைமை பெறும் தினத்திற்கு அண்மித்த ஐந்து (5) வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்;

(iv) பதவி உயர்வுக்காகத் தகைமை பெறும் தினத்திற்கு அண்மித்த ஐந்து (5) வருட காலத்தினுள் திருப்திகரமான அல்லது அதிகமான செயலாற்றுகை மட்டம் ஒன்றை அடைந்திருத்தல் வேண்டும்;

(v) உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல்;

(vi) 12:6:II: (iii) இன் கீழ் காட்டப்படும் தேவையான உரிய பயிற்சியை நிறைவு செய்திருத்தல்.

10.3.2 பதவி உயர்வு முறை:

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறு மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய விசேட வகுப்புக்குத் தரமுயர்த்தல் அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்;

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்பு மற்றும் திறமை கவனத்தில் கொள்ளப்படும்.

**11. பதவிகளுக்கு நியமித்தல்:**

| பதவி | தகைமைகள் | தெரிவு செய்யும் முறை |
|---|---|---|
| 01. பணிப்பாளர் நாயகம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் விசேட தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல் | அமைச்சரவையினால் நியமிக்கப்படுவார் |
| 02. மேலதிகச் செயலாளர் கால்நடை வள அமைச்சு | இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் விசேட தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல் | திறமை மூப்பு மற்றும் திறமை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார் |
| 03. மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் விசேட தரத்தின் உத்தியோக்கதராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்.<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப் பட்டுள்ளது |
| 04. பணிப்பாளர்<br>* கால்நடை வளங்கள் அமைச்சு<br>* கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்<br>* வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்<br>* சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான மத்திய அமைச்சு | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறை வழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில்காட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 05. மேலதிகப் பணிப்பாளர்<br><br>தேசிய வனவிலங்குப் பூங்கா திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில்காட்டப்பட்டுள்ளது |
| 06. பதிவாளர் (கால்நடை உணவு)<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறை வழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவை கள் ஆணைக்குழுவினால் நியமிக் கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 07. பதிவாளர் (கால்நடை ஔடதம்)<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில்காட்டப்பட்டுள்ளது |
| 08. பிரதம கால்நடை நோய்த்தடுப்பு உத்தியோகத்தர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 09. பிரதம கால்நடைப் பொருளியலாளர்<br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைபூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம்(06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 10. பிரதம தொற்று நோயியலாளர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைபூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய கட்டமைக்கப் பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப் பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப்பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 11. பிரதம விஞ்ஞானி<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை ஆராய்ச்சி/ ஆராய்ச்சி உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 12. கால்நடை புலனாய்வு நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய கட்டமைக்கப் பட்ட நேர்முகப்பரீட்சை நடாத் தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்.<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 13. பிரதம தடுப்பூசியியலாளர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 14. கால்நடை விரிவாக்கல் நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06)பின் னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 15. கால்நடை இனப்பெருக்க நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 16. கால்நடை இனவிருத்தி உருவாக்கல் நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 17. பிரதம விவசாய பொருளியலாளர் (Agronomist)<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/விவசாய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 18. கால்நடை பொதுச் சுகாதார நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |
| 19. பாற்பண்ணைப் பொறியியல் நிபுணர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத் தினைப்பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதி முறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறு களுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 20. மாகாணப் பணிப்பாளர்<br><br>மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | கால்நடை வைத்திய விஞ்ஞான பட்டத்துடன் இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது. |
| 21. மேலதிக மாகாணப் பணிப்பாளர்<br><br>மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | கால்நடை வைத்திய விஞ்ஞான பட்டத்துடன் இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்.<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது. |
| 22. விடயத்தோடிணைந்த நிபுணர்.<br><br>மாகாணகால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்.<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது. |
| 23. பிரதம நகர கால்நடை வைத்திய உத்தியோகத்தர்<br><br>உள்ளூராட்சி நிறுவனம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தரத்தில் 3 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த கால்நடை வைத்திய உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறைவழிப் படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவார்.<br><br>புள்ளி விதிமுறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 24. பிரதிப் பணிப்பாளர்<br><br>* கால்நடை வளங்கள் விடய அமைச்சு<br><br>* கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் II ஆம் தரத்தில் ஐந்து (05) வருட தொடர்ச் சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் | அனுமதிக்கப்பட்ட புள்ளி விதிமுறைகளுக்கமைய முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார்<br>புள்ளி விதி முறைகள் ஆறாம் (06) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது. |
| 25. கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 1. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை வைத்திய உத்தியோகத்தராக குறைந்த பட்சம் ஒரு வருடம் (01) மற்றும் உயர்ந்த பட்சம் (03) வருடங்கள் நிரந்தர சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய கால்நடை வைத்தியம் தொடர்பாக 4 வருடங்களைக் கொண்ட பட்டத்தில் 1 ஆம் தரத்தில் அல்லது 2 ஆம் தரத்தில் (உயர் பிரிவில்) சித்தியடைந்திருத்தல்<br><br>2. உரிய காலப் பகுதியில் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படாதிருத்தல்<br><br>3. உரிய காலப்பகுதிக்காக சம்பள அதிகரிப்புக்கள் அனைத்தையும் பெற்றிருத்தல் | எழுத்துப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய நிலவும் வெற்றிடங்களுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களை திறமை ஒழுங்கிற்கமைய நியமித்தல் நியமிக்கும் அதிகாரியினால் மேற்கொள்ளப்படும். (பாடத்திட்டம் ஏழாம் (07) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.)<br><br>**குறிப்பு**: கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தராக மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய நியமிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் கால்நடை வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட சந்தர்ப்பம் வழங்கப் படமாட்டாது |
| 26. ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br><br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 1. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை வைத்திய உத்தியோகத்தராக குறைந்த பட்சம் ஒரு வருடம் (01) மற்றும் உயர்ந்த பட்சம் (03) வருடங்கள் நிரந்தர சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய கால்நடை வைத்தியம் தொடர்பாக 4 வருடங்களைக் கொண்ட பட்டத்தில் 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பு (உயர் பிரிவில்) சித்தியடைந்திருத்தல்<br><br>2. உரிய காலப் பகுதியில் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக் கப்படாதிருத்தல்<br><br>3. உரிய காலப்பகுதிக்காக சம்பள அதிகரிப்புக்கள் அனைத்தையும் பெற்றிருத்தல் | எழுத்துப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய நிலவும் வெற்றிடங்களுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களை திறமை ஒழுங்கிற்கமைய நியமித்தல் நியமிக்கும் அதிகாரியினால் மேற்கொள்ளப்படும். (பாடத்திட்டம் ஏழாம் (07) பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.)<br><br>**குறிப்பு**: ஆராய்ச்சி உத்தியோகத்தராக மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய நியமிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் கால்நடை வைத்திய அதிகாரியாக / கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது |

*12.* **அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவைப் பிரமாணக் குறிப்பில் காட்டப்படும் பொது நிபந்தனைகளைத் தவிர்ந்த ஏனைய நிபந்தனைகள்:**

1. இலங்கைக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சகல உத்தியோகத்தர்களும் மாகாண அரச சேவையில் சேவை செய்வதற்குக் கட்டுப்பட்டவர்களாவர். இதற்காக மாகாண அரச சேவைப் பதவியொன்றில் பணிபுரிவதற்குத் தற்காலிகமாக விடுவிக்கப்பட முடியும். அவ்வாறு பணிபுரிய வேண்டிய காலம் சேவையின் அத்தியாவசியத் தன்மை, ஆளனியினரை பணிக்கமர்த்தும் அவசியத் தன்மை மற்றும் வேறு உரிய காரணங்களுக்கமைய மாகாண அதிகாரி மற்றும் நியமன அதிகாரி ஆகியோர் ஏற்படுத்திக் கொண்டுள்ள தீர்மானத்திற்கமைய தீர்மானிக்கப்படும்.

   (அ) சேவையிலிருந்து விடுவிப்பதற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு மாகாண அரச சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யும் கடிதம் மாகாண அதிகாரிகள் மூலம் உரிய உத்தியோகத்தருக்கு வழங்கப்படும். சேவையின் இடமாற்ற விதிமுறைகளுக்கமைய எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய உரிய மாகாண அதிகாரிகள் மூலம் மாகாணத்தினுள் இடமாற்றம் செய்யப்படுவதற்கு உட்பட்டது.

   (ஆ) மாகாண அரச சேவைக்காக விடுவிக்கப்பட்டாலும் அந்தக் காலத்தினுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிருவாகம் மற்றும் ஒழுக்க விதிமுறைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

   (இ) மாகாண அரச சேவைக்காக விடுவிக்கப்பட்ட கால எல்லை நிறைவடைந்தவுடன் மீண்டும் சேவைக்குத் திரும்ப வேண்டும்.

2. இந்தப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு மேலதிகமாகத் தாபனக் கோவையில் முதலாம் மற்றும் இரண்டாம் பகுதிகளின் விதிமுறைகள், நிதிப் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவை விதிமுறைகள், அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தின் பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளுக்கும் சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் கட்டுப்பட்டவர்களாவர்.

3. இந்த பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடயமாவது காணப்படுமாயின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. தகுதிகாண் காலத்தினைத் திருப்திகரமாக நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருப்பின் உரிய பதவியில் நிரந்தரப்படுத்தப்படுவர்.

5. பதில் கடமை காலப்பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் உரிய பதவியில் நிரந்தரப்படுத்தப்படுவர்.

6. திறன் அபிவிருத்தி :

   (I) பயிற்சி தொடர்ச்சியாக நடாத்தப்படும் செயன்முறையாகும். சேவையில் உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு சேவையின் நிருவாகப் பொறுப்புக்கள் மற்றும் அவற்றின் தொழில் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் இதன் மூலம் வழங்கப்படும். பயிற்சி, அடிப்படைப் பயிற்சி மற்றும் சேவைப் பயிற்சி என இரு வகைப்படும். உரிய பயிற்சிப் பாடநெறி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தப்படும்.

   (II) பயிற்சித் தேவைப்பாடுகள் பின்வருமாறு அமையும்:

      (i) III ஆம் தரம் உத்தியோத்தர்களுக்கான பயிற்சி
      (ii) II ஆம் தரம் உத்தியோத்தர்களுக்கான பயிற்சி
      (iii) I ஆம் தரம் உத்தியோத்தர்களுக்கான பயிற்சி

   (III) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் தேவைக்கேற்றவாறு மேற்குறிப்பிட்ட பயிற்சிப் பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படும். இந்தக் கற்கைநெறி காலத்தின் தேவைக்கேற்ப திருத்தம் செய்யப்பட்டு செயற்படுத்தப்படும்.

**13. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிமுறைகளில் காட்டப்படும் பொருள்கோடல் தவிர்ந்த ஏனைய பொருள்கோடல்கள்.**

(அ) 'சேவைப் பிரமாணம்' என்பது, இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பெனக் கருதப்படும்.

(ஆ) 'ஆணைக்குழு' என்பது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவெனக் கருதப்படும்.

(இ) 'சேவை' என்பது, இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை எனக் கருதப்படும்.

(ஈ) 'செயலாளர்' என்பவர் கால்நடை வளங்கள் விடயத்திற்குப் பொறுப்பான படிநிலை அமைச்சின் செயலாளர் எனக் கருதப்படுவார்.

(உ) 'பணிப்பாளர் நாயகம்' என்பவர் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் எனக் கருதப்படுவார்.

(ஊ) 'அமைச்சு' என்பது, கால்நடை வளங்கள் விடயத்திற்குப் பொறுப்பான படிநிலை அமைச்சு எனக் கருதப்படும்.

(எ) 'தொடர்ச்சியான சேவைக்காலம்' என்பது, உரிய பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே கடமையில் ஈடுபட்டுள்ள சேவைக்காலமாகும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலம் தொடர்ச்சியான சேவைக்காலமெனக் கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

(ஏ) 'உரிய துறைக்கான பொருத்தமான பாடங்கள்' என்பது கீழே குறிப்பிடப்படும் பாடத்துறைகள் அல்லது அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட பாடத்துறைகளாகும்.

கால்நடைச் சுகாதாரம்

(அ) தொற்று நோயியல்
(ஆ) நோய்த்தடுப்பு
(இ) நோய் நிர்ணயம்
(ஈ) கால்நடை பொதுச் சுகாதாரம்

கால்நடை இனப்பெருக்கம்

(1) கால்நடை இனப்பெருக்கம்
இனப்பெருக்க உடற்கூற்று விஞ்ஞானம்
இனப்பெருக்கம்/மரபணுவியல் விஞ்ஞானம்
இனப்பெருக்கக் குறைபாடுகள்
செயற்கைச் சினைப்படுத்தல், முளையத்தை பதித்தல் உயிரியல் தொழில்நுட்பம், மூலக்கூற்று உயிரியல்.

(2) கால்நடை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்

கால்நடைப் போஷாக்கு
கால்நடைப் பராமரிப்பு
பண்ணைக் கழிவு முகாமைத்துவம்
புல் தரை அபிவிருத்தி

(3) விரிவாக்கல் கல்வி மற்றும் பயிற்சி
(4) பொது முகாமைத்துவம்
(5) விவசாய /கால்நடை பொருளியல்
(6) இயற்கை வள முகாமைத்துவம்
(7) தகவல் தொழில்நுட்பம்
(8) உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்
பால் உற்பத்தித் தொழில் நுட்பம், இறைச்சி உற்பத்தித் தொழில் நுட்பம், உணவுப் பாதுகாப்புத் தொழில்நுட்பம்
(9) பொதுக் கால்நடை சுகாதார சேவை
(10) வனவிலங்கு முகாமைத்துவம்
(11) விலங்கியல் விஞ்ஞானம் மற்றும் மூலக்கூற்று உயிரியல்.
(12) நீரியல் வள முகாமைத்துவம்
(13) கால்நடை நலன்புரிச் சட்டங்கள்
(14) உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்

(15) பண்ணை முறைகள்
(16) ஆராய்ச்சித் திட்டமிடல்/புள்ளிவிபரங்கள்
(17) சுற்றாடல் விஞ்ஞானம்
(18) பக்றீரியாவியல்
(19) விலங்கு நோயியல்
(20) விவசாய விரிவாக்கம்

போன்ற பாடத்துறைகள் அல்லது அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய செயலாளரினால் அனுமதிக்கப்படும் பாடத் துறைகளாகும்.

**14. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் புதிய சேவைப் பிரமாணங்களுக்கமைய தரங்களுக்கு உள்வாங்கலும் இடைக்கால விதிமுறைகளும்:**

14.1 சேவையில் உள்வாங்குதல்:

இந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்திற்குச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் கீழ் குறிப்பிடப்படும் வகையில் புதிய சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கு உள்ளீர்க்கப்படுவர். உள்ளீர்த்தலின் காரணமாக உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் அல்லது சம்பள உயர்வுத் திகதியில் மாற்றம் ஏற்படாது என்பதுடன் உத்தியோகத்தர்களின் சேவை மூப்பிலும் மாற்றம் ஏற்படாது.

(i) சேவையின் III ஆம் தரத்திற்கு உள்ளீர்த்தல்:

(அ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு II ஆம் தரத்தின் II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள்.

(ii) சேவையின் II ஆம் தரத்திற்கு உள்ளீர்த்தல்:

(அ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு II ஆம் தரத்தின் I ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள்.
(ஆ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு II ஆம் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள்.

(iii) சேவையின் I ஆம் தரத்திற்கு உள்வாங்கல்:

(அ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு I ஆம் தர உத்தியோகத்தர்கள்.

(ஆ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு மேலதிக ஆளணி அடிப்படையில் I ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

(இ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு I ஆம் தரத்திற்குத் தரமுயர்த்துவதற்கானத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள்.

(iv) சேவையின் விஷேட தரத்திற்கு உள்வாங்கல்:
(அ) அமுல்படுத்தப்படும் திகதிக்கு சேவையின் விஷேட தரத்திற்கான நிரந்தரப் பதவியினை வகிக்கும் மற்றும் அதற்குரிய சம்பளத்தினைப் பெறும் உத்தியோகத்தர்கள்.

14.2 இடைக்காலத்தினுள் பதவி உயர்வு வழங்கல்:

இடைக்காலமானது 2015.12.31 வரையில் நடைமுறையில் இருக்கும்.

14.2.1 II ஆம் தரத்திற்கு உள்வாங்கல்:

இந்த சேவைப் பிரமாணம் அமுலாக்கப்படும் திகதிக்கு முன்னர் காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்படும்.

14.2.2 தரம் I க்கு பதவி உயர்வு செய்தல்

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 14.1 இல் II ஆம் உப பிரிவின் கீழ் IIஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அல்லது இடைக்காலத்தில் II ஆம் தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பெறுவதற்கான திகதிக்கு அண்மித்த 05 ஆண்டு காலப்பகுதியினுள் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றிருப்பின் மற்றும் தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பெறுவதற்கான திகதிக்கு அண்மித்த ஐந்து (05) ஆண்டு காலப்பகுதிக்குள் செய்த தவறுக்காக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாமல் இருப்பின் சேவையின் I ஆம் தரத்திற்குத் தரமுயர்த்தப்படுவார்.

14.2.3 விஷேட தரத்திற்கு பதவி உயர்வு:

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.3 இந்த அமைவாக மேற்கொள்ளப்படும்.

14.3 தற்போது கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளை வகிப்போருக்கு அப்பதவிகளைத் தொடர்ந்தும் வகிக்க முடியும்.

